## DEPOSITION OF WITNESS

(ChapterXXIII Code of Criminal Procedure)

-----------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR

**CC.No.390/2022**

**Date :.20.01.2025**

**PW2 ஜெய்சங்கர் க/பெ. செல்வராஜ்**

**மனுவின் பேரில் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் அ.சா.1 என்னுடைய மனைவி என்றால் சரிதான். எனது மனைவியும், எதிரியும் சேர்ந்துதான் புதுவேட்டக்குடி கிராமத்தில் கிராமத்தில் கிருஷ்ணா ஸ்பேர் பார்ட்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த கடை எதிரி கண்ணன் பெயரில் உள்ளது என்றாலும், எனது மனைவி பெயரில் இல்லை என்றாலும் சரியல்ல. கண்ணனும், எனது மனைவியும் மேற்படி கடையை விரிவுபடுத்துவதற்காக கண்ணனை முழுத்தொகையை செலுத்த சொல்லி நாங்கள் எந்த தொகையும் தராமல் பின்பு தருவதாக கூறி கடையை விரிவுபடுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரியிடம் 3 சதவீதம் வட்டிக்காக புரோநோட் மூலம் பணம் வாங்கினோம். எதிரியிடம் நான் புரோநோட் எழுதி கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

எதிரியிடம் அசல் வட்டியுமாக ரூ.2,13,000/- த்தை செலுத்தியதாக என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது தவறு என்றாலும், அவ்வாறு நான் தொகை செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல. கிருஷ்ணா ஸ்பேர் பார்ட்ஸ் கடை எதிரி கண்ணன் பேரிலும், என் மனைவி பெயரிலும் இருந்தது என்றாலும், எதிரிதான் தினமும் காலையில் வந்து கடையை திறப்பார் என்றாலும் சரியல்ல. நானும், எனது மனைவியும்தான் திறப்போம். எனது கடையில் வேலைக்காக காடூர் கிராமத்தை சேர்ந்த வீரமணி என்பவரை நான் வேலைக்கு வைத்திருந்தேன். 07.08.2021 ம் தேதி கடையில் இளஞ்செழியன் என்பவர்

நின்றுகொண்டிருந்தார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அவர் என்னுடைய உறவினர் என்பதால் அவரை சொல்லியுள்ளளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி பெயரில் இருந்த TN46Y8668 என்ற இருசக்கர வாகனத்தை எதிரி பூட்டி சாவியை எடுத்துகொள்ளவில்லை என்றாலும், அந்த வாகனம் எங்களிடம்தான் உள்ளது என்றாலும் அதுகுறித்து நான் போலீஸில் சொல்லியிருந்தால் போலீஸார் வாகனத்தை கைப்பற்றியிருப்பார்கள் என்றாலும் சரியல்ல.

ஏற்கெனவே இது சம்மந்தமாக நான் குன்னம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் போலீஸார் என்னை விசாரித்தபோது கடை என் பெயரிலும், என் மனைவி பெயரிலும், எதிரி பெயரிலும் இருந்ததால் அதை நாங்களே சரிசெய்துகொள்ளவேண்டுமென்று குன்னம் போலீஸார் சொன்னதால் மீண்டும் எனது மனைவியின் மூலம் பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒரு வருடம் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. குன்னம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரானது கடை சம்மந்தமாக கொடுக்கப்பட்டதல்ல. சண்டை சம்மந்தமாக கொடுக்கப்பட்டது.

எதிரி என்னிடம் ரூபாய் 10 லட்சம் கேட்கவில்லை என்றாலும், என்னையும், என் மனைவியையும் ஆபாச வார்த்தை சொல்லி திட்டவில்லை என்றாலும், எதிரி என்னிடமிருந்து வாகனத்தை எடுத்துகொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. கடையை விரிவாக்கம் செய்ய எஎதிரி கொடுத்த பணத்தை திருப்பி கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் குன்னம் மற்றும் பெரம்பலூரில் புகார் கொடுத்து எதிரியை அலைகழிக்கிறோம்எ ன்றால் சரியல்ல. எதிரியிடம் எந்தவித புரோநோட்டும் எழுதிதரவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு எதிராக எதிரி புரோநோட் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. கடை யார் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணங்களை போலீஸிடம்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.